**வலைப்பக்கத் தலைப்பு:** TTC பாதுகாப்பு வழிகாட்டி: பொதுவான பாதுகாப்பு
**துணைத்தலைப்பு:** பாதுகாப்புத்தான் எங்கள் முன்னுரிமை

TTC இல், உங்கள் பாதுகாப்புத் தான் எமது முதன்மையான முன்னுரிமையாகும். எங்கள் குழுவிலுள்ள இயக்குனர்கள், நிலையத்தில் கட்டணம் சேகரிப்போர் (Station Collectors), வாடிக்கையாளர் சேவை முகவர்கள், TTC விசேட காவலர்கள் மற்றும் மேற்பார்வைப் பணியாளர்கள் ஆகியோர் பாதுகாப்பானதும் பத்திரமானதுமான ஒரு சூழலை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் பணிபுரிகின்றனர்.

TTC பணியாளர்களை அவர்களின் சீருடை மற்றும் தனித்துவமான TTC இலச்சினை (crest) மூலம் நீங்கள் இலகுவாக அடையாளம் காணமுடியும். பின்வரும் பாதுகாப்புக் குறிப்புகளைத் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்:

**பேரூந்து அல்லது மின்பேரூந்தில் (Streetcar) பாதுகாப்புக்கான குறிப்புகள் [DROPDOWN BUTTON TBC]**

- சறுக்குதல்கள், விழுதல்கள் அல்லது விபத்துக்களைத் தடுப்பதற்கு ஓடிச்செல்வதைத் தவிர்க்கவும்.
- ஒருபோதும் ஒரு TTC வாகனத்தை அதன் முன்னால் ஓடிச்சென்று நிறுத்த முயற்சிக்க வேண்டாம். ஓட்டுனர் உங்களைப் பார்க்க முடியாமல் இருக்கக்கூடும்.
- உங்கள் கைகளை அல்லது தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்ட வேண்டாம்.
- TTC வாகனத்தின் உள்ளே கீறப்பட்டிருக்கும் வெள்ளைக் கோட்டிற்குப் பின்னால் நிற்க வேண்டும், அத்துடன், நிற்கும் போது விழுந்துவிடாமல் இருப்பதற்கு உலோகத்தூண் கம்பங்களைப் (stanchions) பிடித்துக் கொள்ளவும்.
- பைகள், பார்சல்கள் மற்றும் முதுகுப்பைகளை உங்களுக்கு முன்புறமாக வைத்துச் செல்வதுடன், வாகனங்களில் ஏறும் போது அல்லது இறங்கும் போது அவை கதவுகளின் பக்கத்தில் இடைஞ்சலாக இல்லாமல் விலத்தி வைத்திருக்கவும்.
- மின்பேரூந்து நிறுத்தங்களில் மின்பேரூந்து நிறுத்தப்பட்டுக் கதவுகள் திறக்கப்படும் வரைக்கும் காத்திருந்து அதன் பின்னர் இடதுபுறம் பார்த்து, தெருவில் காலடி எடுத்து வைக்கும் முன்னர், நெருங்கி வரும் போக்குவரத்து நிறுத்தப்பட்டதை உறுதி செய்யவும். வெளியேறும் போது, வலதுபுறம் பார்த்து, நடைபாதைக்கு நேராக நடக்கவும்.
- பிள்ளைகள் பிரிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு அவர்கள் வாகனங்களில் ஏறும்போதும் இறங்கும்போதும் உதவி செய்யவும்.

**சுரங்கப்பாதை நிலையம் (Subway Station) மற்றும் ரயிலில் பாதுகாப்புக்கான குறிப்புகள் [DROPDOWN BUTTON TBC]**

- ரயில் முழுவதுமாக நிறுத்தப்பட்டுக் கதவுகள் திறக்கப்படும் வரை மஞ்சள்நிற நடைபாதை விளிம்பிலிருந்து பாதுகாப்பான தூரத்தில் இருந்து கொள்ளவும்.
- ரயிலுக்கும் நடைபாதைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் கவனித்துக் கொள்ளவும்.
- பிள்ளைகள் ரயிலில் பிரிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்யவும்.

- கதவு மணிகளும் ஒளிரும் விளக்குகளும் கதவு மூடுவதைப் பற்றி எச்சரிக்கும்போது, அதில் கவனம் செலுத்தவும். கதவு மணிகள் ஒலிக்க ஆரம்பிக்கும் தருணத்தில், அவசரப்பட்டு ரயிலினுள் ஏறுவதற்கு முயற்சிக்க வேண்டாம்.
- காயமேற்படாமல் தடுப்பதற்கு, ரயில்ப்பெட்டிக் கதவுகளை வலுக்கட்டாயமாகத் திறக்க முயற்சிக்க வேண்டாம்.
- ரயில்த் தண்டவாளங்களில் இறங்க வேண்டாம். ரயில்த் தண்டவாளங்களில் ஏதாவது விழுந்துவிட்டால், TTC சீருடை அணிந்த பணியாளருக்குத் தெரிவிக்கவும்.

**மின்நகர்த்திகள் (Escalator) மற்றும் படிக்கட்டுகளில் பாதுகாப்புக்கான குறிப்புகள் [DROPDOWN BUTTON TBC]**

- கவனமாக ஏறி இறங்குவதுடன், கைபிடிச் சட்டத்தை உறுதியாகப் பிடித்துக்கொள்ளவும்.
- முன்னோக்கிப் பார்க்குமாறு நின்றுகொள்வதுடன், பொதிகளைக் கைபிடிச் சட்டத்தில் இருந்து விலக்கி வைத்திருக்கவும்.
- ஆடை மற்றும் காலணிகளை இருபக்கங்களிலுமிருந்து ஒதுக்கியவாறு வைத்திருப்பதுடன், காலணிப் பட்டிகளை உரியமுறையில் கட்டி வைத்திருக்கவும்.
- மற்றவர்களுடன் கரிசனையோடு நடந்து கொள்ளவும், அவர்களை அவசரப்படுத்த வேண்டாம்.
- உங்களிடம் நடமாடுவதற்குரிய சாதனம் (mobility device) அல்லது தள்ளுவண்டி (stroller) இருந்தால், தயவுசெய்து மின்னுயர்த்திகளைப் (elevators) பயன்படுத்தவும்.
- பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்திருக்கவும், மேலும் அவர்கள் தனியாக மின்நகர்த்தியைப் பயன்படுத்துவதனை அனுமதிக்க வேண்டாம்.

**படிக்கட்டுக்கான பாதுகாப்புக் குறிப்புகள்**

- கைபிடிச் சட்டத்தைப் பிடித்தவாறு நடக்கவும்.
- மற்றவர்கள் கடந்து செல்வதை அனுமதிப்பதற்கு வலதுபுறத்துக்கு நகர்ந்துகொள்ளவும்.
- உங்களிடம் நடமாடுவதற்குரிய சாதனம் (mobility device) அல்லது தள்ளுவண்டி (stroller) இருந்தால், தயவுசெய்து மின்னுயர்த்திகளைப் (elevators) பயன்படுத்தவும்.

**விரும்பும் இடத்தில் இறங்குவதற்கான கோரிக்கைத் திட்டம் (Request Stop Program): இரவுநேரப் பேரூந்துப் பயணிகளுக்குப் பாதுகாப்பு மற்றும் வசதியளிப்பது**

இரவு 9:00 மணிக்கும் அதிகாலை 5:00 மணிக்கும் இடையில் தனியாகப் பேரூந்தில் பயணிக்கும் பயணிகளுக்காக விரும்பும் இடத்தில் இறங்குவதற்கான கோரிக்கைத் திட்டம் உள்ளது. பாதிக்கப்படலாமென உணரும் பயணிகள் எவரும், தாம் இறங்க வேண்டிய இடத்துக்கு ஒரு TTC நிறுத்தத்துக்கு முன்கூட்டியே இதனைக் கேட்டுக்கொள்வதன் மூலம், வழக்கமான TTC நிறுத்தங்களுக்கு இடையே பேரூந்திலிருந்து வெளியேற முடியும். நீங்கள் முன் கதவுகள் வழியாக வெளியேறுவதற்காக இயக்குநர் பேரூந்தைப் பாதுகாப்பாக நிறுத்துவார்.

**கவனத்திற் கொள்ளவும்:** பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் திட்டத்தை மின்பேரூந்துகளில் பயன்படுத்த முடியாது.

### TTC இன் ஏனைய பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புக் குறிப்புகள்

- காத்திருப்புப் பகுதிகளாகக் குறிக்கப்பட்டிருக்கும்) DWAs) இடங்கள் யாவும், செய்தித்தொடர்புச் சாதனத்தின் (intercom) அணுகல், இருக்கைகள், தடுப்புக் கிராதிகள் (railing), கூடுதலான வெளிச்சம், மூடியசுற்று-த்தொலைக்காட்சி-க்) CCTV) கமராக்கள் மற்றும் கட்டணம் செலுத்தும் தொலைபேசிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- குறிக்கப்பட்டிருக்கும் காத்திருப்புப் பகுதிகள், மின்னுயர்த்திப் பெட்டிகள் (elevator cabs), மின்னுயர்த்தி தரையிறங்கும் இடங்கள் மற்றும் நிலையத்தில் கட்டணம் சேகரிப்போர் பணிக்கமர்த்தப்படாத நுழைவாயில்கள் ஆகிய இடங்களில் செய்தித்தொடர்புச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலையத்திலுள்ள கட்டணம் சேகரிப்போருடன் நேரடியாகப் பேசுவதற்கு அவை உங்களை அனுமதிக்கின்றன.
- TTC நிறுத்தத்திற்குச் செல்லும்போது அல்லது அங்கிருந்து திரும்பும்போது துணிவுடன் நடக்கவும். கவனச்சிதறல்களைத் தவிர்க்கவும், நன்கு ஒளிரும் பகுதிகளைப் பயன்படுத்தவும் மற்றும் உங்கள் சுற்றாடல்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்.
- உங்கள் காரைப் பூட்டி, மதிப்புமிக்க பொருட்களை மற்றவர் கண்ணில் படாதவாறு மறைத்து வைப்பதுடன், உங்கள் வாகனத்தை ஓடக்கூடிய நிலையில் விட்டுவிடாமல் முற்றாக நிறுத்தி வைக்கவும்.
- பிக்பாக்கெட் களவுகளிலிருந்து தப்புவதற்குக் கவனச்சிதறல்களைத் தவிர்க்கவும், பைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளவும், பணப்பைகளை (wallets) உங்கள் முன் பாக்கெட்டுக்குள் எடுத்துச் செல்லவும்.

மேலதிகமான பாதுகாப்பு உதவிக்குறிப்புகளுக்குத், தயவுசெய்து எங்கள் பிரத்தியேகமான அவசரநிலை நெறிமுறைகள் பக்கத்தைப் (Emergency Protocols page) பார்வையிடவும்.